KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.15

ARTICLES

சு. தமிழ்ச்செல்வி நாவல்களில் குடும்ப வறுமையும் சாதியப் பாகுபாடும்

Family Poverty and Caste Discrimination in the Novels of S. Tamilselvi

த. பவித்ரா[1,*], முனைவர் பெ. ரேவதி[2]

[1] ஆய்வாளர், முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

[2] நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

***Corresponding author:** த. பவித்ரா, laksh683@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 10 October 2026
Accepted: 28 October 2026

Article ID
KIJTS-2026-0010

Peer review
Double-blind peer review

Keywords
S. Tamilselvi
Alam
Geethari
Kannagi
family poverty
caste discrimination
untouchability
marginalised communities

ABSTRACT

This paper examines how family poverty and caste discrimination are represented in S. Tamilselvi's novels Alam, Geethari and Kannagi. It reads poverty through food, clothing and shelter, and caste discrimination through the control of resources, access to water and streets, and everyday untouchability. The study finds that in these novels the family is shown as part of the economic and caste structures of society, not as an isolated unit.

How to cite this article: த. பவித்ரா, & முனைவர் பெ. ரேவதி (2026). சு. தமிழ்ச்செல்வி நாவல்களில் குடும்ப வறுமையும் சாதியப் பாகுபாடும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03). https://doi.org/10.63300/kijts603112026.15
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

சு. தமிழ்ச்செல்வியின் ‘அளம்’, ‘கீதாரி’, ‘கண்ணகி’ ஆகிய நாவல்கள் விளிம்புநிலை மக்களின் குடும்ப வாழ்வை வறுமையும் சாதியப் பாகுபாடும் எவ்வாறு சிதைக்கின்றன என்பதைப் பல்வேறு கோணங்களில் பதிவு செய்கின்றன.

இக்கட்டுரை, அந்தந்த நாவல்களில் இடம்பெறும் குடும்ப வறுமையை உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகள் வழியாகவும், சாதியப் பாகுபாடு, அதிகார ஆதிக்கம், தீண்டாமை ஆகியவற்றின் வழியாகவும் ஆராய்கிறது. குடும்பத் தலைவனின் வேலையின்மை குடும்பத்தில் சண்டைகளையும் பசியையும் உருவாக்குகிறது; ஆடை வறுமையின் புலனாகும் அடையாளமாகிறது; சாதியப் பாகுபாடு அரசு நிவாரணங்கள், நீர்நிலைகள், தெருக்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றில் வெளிப்படுகிறது என்பது இங்குச் சுட்டிக்காட்டப்படுகிறது. இதன் வழி, குடும்பச் சிக்கல்கள் தனிமனிதப் பிரச்சினைகள் அல்ல; சமூகத்தின் பொருளாதார, சாதியக் கட்டமைப்புகளோடு அவை தொடர்புடையவை என்பது நிறுவப்படுகிறது.

திறவுச்சொற்கள்: சு. தமிழ்ச்செல்வி, அளம், கீதாரி, கண்ணகி, குடும்ப வறுமை, சாதியப் பாகுபாடு, தீண்டாமை, விளிம்புநிலை மக்கள்

முன்னுரை

பழங்கற்காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் தங்களது பாதுகாப்பு, உணவு தேடல் மற்றும் வாழ்வாதாரத் தேவைகளின் அடிப்படையில் இனக்குழுக்களாகக் கூடி வாழ்ந்தனர். அவ்வினக்குழுவிற்கு தலைவனாக ஒருவனைத் தேர்ந்தெடுத்து, அவனது தலைமையின் கீழ் கூட்டாகச் செயல்பட்டனர். காலப்போக்கில் மனிதனின் சிந்தனை வளர்ச்சியும் நாகரிக முன்னேற்றமும் ஏற்பட்ட நிலையில், தனது இனத்தவருடன் இணைந்து குடும்பமாக வாழும் வாழ்க்கை முறையை உருவாக்கிக் கொண்டான். இவ்வாறு தோற்றம் பெற்ற குடும்ப அமைப்பு, காலமாற்றங்களுக்கு ஏற்பப் பல்வேறு மாற்றங்களைப் பெற்றாலும், இன்றளவும் மனித சமூகத்தின் அடிப்படை அமைப்பாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது.

குடும்பம் என்பது தனிமனிதனின் வாழ்வுக்கும், சமூகத்தின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்துள்ளது. எனினும், சமூகத்தின் அனைத்து குடும்பங்களும் ஒரேவிதமான வாழ்வியல் சூழலைக் கொண்டிருப்பதில்லை. குறிப்பாக விளிம்புநிலை மக்களும், பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களும் வறுமை, வேலைவாய்ப்பின்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூகப் புறக்கணிப்பு போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர். இதனுடன் சாதியப் பாகுபாடு, சமூக ஏற்றத்தாழ்வு, அதிகார மையங்களின் ஆதிக்கம் போன்றவை அவர்களின் குடும்ப மற்றும் சமூக வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகைய சமூக வாழ்வியல் எதார்த்தங்களை இலக்கியங்கள் தமது படைப்புகளில் பதிவு செய்து வருகின்றன.

குறிப்பாக, சு. தமிழ்ச்செல்வியின் ‘அளம்’, ‘கீதாரி’, ‘கண்ணகி’ போன்ற நாவல்கள் விளிம்புநிலை மக்களின் குடும்ப வாழ்வையும், அவர்களின் பொருளாதாரச் சிக்கல்களையும், சமூகப் புறக்கணிப்பையும், சாதியப் பாகுபாடுகளையும் நுட்பமாகப் பதிவு செய்கின்றன. குடும்பம், சமூகம், வறுமை, சாதி, மனித உறவுகள் ஆகியவற்றின் ஊடாக வெளிப்படும் வாழ்வியல் எதார்த்தங்களை இந்நாவல்கள்

வெளிப்படுத்துகின்றன. அந்த வகையில், சு. தமிழ்ச்செல்வியின் நாவல்களில் இடம்பெறும் குடும்ப அமைப்பு மற்றும் சமூக வாழ்வியல் சார்ந்த கூறுகளையும், அவற்றின் வழியாகப் புலப்படும் சாதிய மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரை 'குடும்ப வறுமை', 'சமூகத்தில் சாதியப் பாகுபாடு' என இரு பெரும் பகுதிகளாக அமைகிறது.

ஆய்வு எல்லையும் முறையும்

இவ்வாய்வு சு. தமிழ்ச்செல்வியின் நாவல்களை முதன்மைச் சான்றுகளாகக் கொண்டு, குடும்ப வறுமையையும் சாதியப் பாகுபாட்டையும் விளக்கமுறை, பகுப்பாய்வுமுறை ஆகியவற்றின் வழி ஆராய்கிறது. நாவல்களில் இடம்பெறும் உரையாடல்களும் நிகழ்வுகளும் மேற்கோள்களாகத் தரப்பட்டு, சமூகவியல் நோக்கில் விளக்கப்படுகின்றன. வறுமை, சாதி ஆகிய சொற்களின் பொருளை அறிய, இத்துறை சார்ந்த நூல்கள் துணைச்சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாவல்	**வெளியீடு**	**பதிப்பு**	**ஆய்வில் இடம்பெறும் கூறு**
அளம்	New Century Book House Pvt. Ltd., சென்னை	நான்காம் பதிப்பு, நவம்பர் 2018	குடும்ப வறுமை (வேலையின்மை, உணவு, உடை); சாதிய அதிகாரம்
கீதாரி	New Century Book House Pvt. Ltd., சென்னை	பதினாறாம் பதிப்பு, ஆகஸ்ட் 2023	வறுமையும் ஆடையும்; பெண்ணுக்கு நேரும் தீண்டாமை
கண்ணகி	New Century Book House Pvt. Ltd., சென்னை	முதல் பதிப்பு, பிப்ரவரி 2022	நீர்நிலை, தெரு சார்ந்த தீண்டாமை

இவற்றுடன், உறைவிடத் தேவையைச் சுட்டுவதற்கு 'மாணிக்கம்' நாவலும் துணையாகக் கொள்ளப்படுகிறது. நாவல்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பக்க எண்கள் மேற்கொள்ளப்பட்ட பதிப்புகளுக்கு உரியவை.

குடும்ப வறுமை

ஒரு குடும்பத்தில் வறுமை என்பது, மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத அளவிற்கு வேலைவாய்ப்பிலிருந்து கிடைக்கும் வருமானம் மிகவும் குறைவாக இருக்கும் நிலையாகும். இது ஒரு சமுதாயத் தீமை ஆகும். ஒரு குடும்பத்தில் உள்ள உறுப்பினர் போதிய வருவாயின்மையாலோ, பொறுப்பற்ற செலவுகளாலோ தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களான குடும்பத்தினருக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தவிப்பதும் வறுமையாகும்.

தமிழ்மொழியில் பொருளின் தன்மையை அழுத்தமாகவும், செய்யுளின் ஓசை நயத்தை ஏற்படுத்தவும் ஒருபொருட்பன்மொழி பயன்படுகின்றது. இதில் ‘வறுமை’ என்ற ஒரு பொருள்படும் சொல்லுக்கு பல பெயர்கள் உள்ளன. அவை,

> *அற்றம், இடும்பை, இல்லாமை, இலம்பாடு, இன்மை, எளிமை, ஏழ்மை, ஒற்கம், கலி, கேடு, சிறுமை, தரித்திரம், தாழ்வு, துவ்வாமை, துணி, நல்குரவு, நல்கூர்மை, நிரப்பு, பஞ்சம், பரு, மறல், மிடி, வறன், வெப்பு, வெறுமை (அமிர்தலிங்கம் 28)*

என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன. வறுமை என்பது ஒருவரின் சரியான வருவாய் பற்றாக்குறை மட்டும் அல்ல; சமுதாயத்தில் கிடைக்கக்கூடிய உரிமைகளைப் பெறாதவர்களையும் வறுமையில் இருப்பவர்களாகவே கருதலாம். ஆகவே, வறுமை என்பது பொருளாதார பற்றாக்குறை என்ற வருவாய்ப் பரிமாணம், சமூக உரிமை இழப்பு என்ற பரிமாணம் என இரு தளங்களைக் கொண்டது.

வறுமையின் பரிமாணம்	**விளக்கம்**	**ஆய்வில் காண்பது**
பொருளாதார பற்றாக்குறை	போதிய வருவாய் இல்லாமை அல்லது பொறுப்பற்ற செலவுகளால் உணவு, உடை, உறைவிடம் நிறைவேறாமை	குடும்பத் தலைவன் வேலைக்குச் செல்லாமை, ஒருவேளை உணவு, கிழிந்த ஆடை, தங்க இடம் தேடல்
சமூக உரிமை இழப்பு	சமூகத்தில் கிடைக்கக்கூடிய உரிமைகளை அடைய முடியாமை	சாதியப் பாகுபாட்டால் நீர்நிலை, தெரு, அரசு நிவாரணம் மறுக்கப்படுவது

‘அளம்’ காட்டும் குடும்ப வறுமை

‘அளம்’ நாவலில் சுந்தரம்பாளின் குடும்பம் வறுமையின் பிடியில் இருப்பதை சு. தமிழ்ச்செல்வி கண்முன்னே காட்டுவதாக அமைத்துள்ளார். இங்கு வறுமை மூன்று நிலைகளில் வெளிப்படுகிறது: வேலையின்மையால் ஏற்படும் குடும்பச் சண்டை, உணவுப் பற்றாக்குறை, ஆடையின்மை.

வேலையின்மையால் உருவாகும் குடும்பச் சண்டை

வறுமையிலிருந்து மீளத் துடிப்பவர்கள் வருவாயை ஈட்ட முதலில் வேலைக்குச் செல்லத் தொடங்குவர். வேலைக்குச் செல்லாவிட்டால் குடும்பத்தில் என்ன நிகழும் என்பதை ‘அளம்’ நாவலில் இடம்பெறச் செய்துள்ளார். சுந்தரம்பாளின் மகளான வடிவாம்பாள் ‘அம்மா… அம்மா…’ என்று அழைத்து அப்பா எங்கே என்று கேட்டதும் சுந்தரம்பாள் கடும் கோபம் கொண்டு பதிலளிக்கிறாள்:

> *“இஞ்ச வா, வந்து யாம் முந்தானய அவுத்துப்பாரு”*
>
> *என்றாள் வெடுக்கென்று.*

சுந்தரம்பாள் தன் கணவன் சுப்பையன்மேல் கோவமாயிருந்தாள். வேலைக்குப் போவதில்லையென்று அவன் மீது வெறுப்பாயிருந்தது. இன்று காலையில் கூட இருவருக்கும் இதுகுறித்து வாய்த் தகராறு ஏற்பட்டது. (தமிழ்ச்செல்வி, அளம் 1)

தொடர்ந்து சுப்பையன் வேலைக்குச் செல்லாமல் இருப்பதால் குடும்பத்தில் அடிக்கடி சண்டைகள் நிகழ்கின்றன. ஒரு காலையில் சுப்பையன் சுந்தரம்பாளிடம் கொஞ்சம் தெளுவு தண்ணீரைக் கேட்டான்; சுந்தரம்பாள் முனிங்கிக்கொண்டே தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு:

"எங்கயாவுது வேலக்கிப் போறியளா?"

"எவடி இவ, பொளைக்கமாட்டாம, வேலக்கிப் போறியளா வேலக்கிப் போறியளா வேலக்கிப்போறியளாங்குறவ?"

"மம்ம தெளியிறத்துக்குள்ள எங்கயோப் போறமேரி தெளுவுகேட்டியளே"

"ஒப்புறான...வுட்டன், வுட்டன். காளமாட்ட விக்கப் போறியளா? அதயும் வித்துப்புட்டு இஞ்ச யாருமசுர புடுங்கிக்கிட்டு ஒக்காந்துருக்கப்போறிய?" (தமிழ்ச்செல்வி, அளம் 2)

என்று சுந்தரம்பாள் கேட்க, சுப்பையன் கோபம் கொண்டு அவள் வாய் நீளுகிறது என அவர்கள் இருவரும் சண்டையிட்டனர். ஒரு குடும்பத் தலைவன் வேலைக்குச் செல்லாவிட்டால் குடும்பத்தில் ஏற்படும் நெருக்கடியை இந்நாவலில் காண முடிகிறது.

உணவுப் பற்றாக்குறை

வறுமையின் உச்சம் கண்ட சுந்தரம்பாளின் குடும்பம் உண்ண உணவு இல்லாமல் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்கிறது:

சுந்தராம்பாளின் வீட்டில் எல்லோருக்குமே ஒருநாளைக்கு ஒருவேளை சாப்பாடு என்றுதான் ஓடிக்கொண்டிருந்தது. சின்னவள் அஞ்சம்மாள் பசி தாங்கிக்கொண்டு கிடக்கமுடியாது. தினமும் ஆட்டை கட்டியிருக்கும் சந்துக்குள் போய் படுத்துக்கொண்டு குட்டி குடிப்பதுபோலவே ஆட்டில் பால் குடித்து விடுவாள். (தமிழ்ச்செல்வி, அளம் 119)

இதன் வழி, குடும்பத்தினர் அனைவரும் ஒரு நாளைக்கு ஒருவேளை சாப்பாட்டுடன் வாழ நேர்வதும், குழந்தை பசியைத் தணிக்க ஆட்டின் பாலை நாடுவதும் சுட்டிக்காட்டப்படுகின்றன.

ஆடையின்மை

மனிதன் சமூகத்தில் வாழ அடிப்படைத் தேவைகளில் உணவுக்கு அடுத்து இருப்பிடம், உடை ஆகியவை இடம்பெறுகின்றன. ஒருவன் அணியும் உடையைக் கொண்டு அவன் சமூகத்தில் எந்த நிலையில் வாழ்கிறான் என்பதைக் கண்டறியலாம்; கிழிந்த ஆடையை அணியும் குடும்பம் வறுமையின் பிடியில் இருப்பதை உணர்த்தும். பசியால்

வாடியவரைக் கண்டவுடன் அவருடைய பசிவருத்தம் மற்றவர்க்குத் தெரியாது; ஆனால் உடையின் குறையோ அவருடைய வறுமையை அடுத்தவருக்கு நன்கு புலப்படுத்தும். அடிப்படைத் தேவையில் இரண்டாமிடம் பெற்றிருக்கும் ஆடை, உலகையாளும் வேந்தனாயினும் வேடராயினும் அனைவருக்கும் இன்றியமையாதது; இதை,

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே"

எனும் புறநானூற்றுக் கூற்று உணர்த்துகிறது. நல்ல உடையை அணியாமல் வறுமையில் இருப்பதை 'அளம்' நாவலில் சு. தமிழ்ச்செல்வி காட்டியுள்ளார். சுப்பையன் தன் மகள் வடிவாம்பாள் பாவாடை அணிந்து, மேல்சட்டை இல்லாமல் திரிவதை எண்ணி வருந்துகிறான். தான் வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்லும்போது இரண்டு மேல்சட்டை வாங்கிக்கொள்ளுமாறு தனது மகளுக்குப் பணம் கொடுக்கிறான்; இதில் குடும்ப வறுமை வெளிப்படுகிறது.

'கீதாரி', 'மாணிக்கம்' காட்டும் குடும்ப வறுமை

'கீதாரி' நாவலில் ஆடையின் வழியாகவும், 'மாணிக்கம்' நாவலில் உறைவிடத் தேடலின் வழியாகவும் வறுமை வெளிப்படுகிறது.

'கீதாரி': ஆடையின் வழி வெளிப்படும் வறுமை

'கீதாரி' நாவலில் கரிச்சாவின் அம்மா ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவள். அவள் அணிந்திருந்த ஆடையைக் கண்டால் அவளது வறுமையின் நிலையை அறியலாம். மாலைப் பொழுதில் சூரியன் மறைகின்ற வேளையில் அவள் நின்ற கோலத்தை நாவல் இவ்வாறு வரைகிறது:

> *உப்பிப் பெருத்த வயிறு பானையைப் போல் முன்னேத் தள்ளிக் கொண்டிருந்தது. பளபளப்பான அந்த பெரிய வயிற்றை எந்தத் துணியாலும் மூடாமல் வந்து நின்றாள். வயிற்றின்கீழே நாடாவால் கட்டப்பட்டிருந்தது பாவாடை. தளர்ந்து சரிந்து தொடை வரை இறங்கியிருந்த வயிற்றை அந்தப் பாவாடை மறைக்கவில்லை. அந்தப் பாவாடையிலும் இரண்டு மூன்று கிழிசல்களிருந்தன. (தமிழ்ச்செல்வி, கீதாரி 16)*

என்ற வரிகள் கரிச்சாவின் தாய் வறுமையில் உழல்வதைக் காட்டுகின்றன. உடை அவளுக்கு மாற்றுடையாகவோ மறைவிடமாகவோ அமையாத நிலையையே இங்குக் காணமுடிகிறது.

'மாணிக்கம்': உறைவிடத் தேடல்

'மாணிக்கம்' நாவலில் குடும்பச் சூழலால் இல்லத்தை விட்டு மனைவியுடன் வெளியேறிய மாணிக்கம், இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற சிரமப்பட்டான். பசியாலும் பயணத்தாலும் சோர்ந்த, நிறைமாத கர்ப்பிணியான செல்லாயி, அசந்து படுக்க இடமில்லாமல் தத்தளித்தாள். மாணிக்கம் தேநீர்க்கடை

பெண்மணியிடம் இருநாட்கள் தங்குவதற்கு இடமளிக்குமாறு கேட்பதில் உறைவிடத்தைத் தேடும் மனிதனின் நிலை புலனாகின்றது.

சமூகத்தில் சாதியப் பாகுபாடு

சாதியப் பாகுபாடு என்பது சமூகத்தைப் படிநிலை சார்ந்த குழுக்களாகப் பிரிக்கிறது; இந்தப் பிரிவு குடியுரிமை, அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய தளங்களில் வெளிப்படுகிறது. அடிமட்டத்தில் இருப்பவர்களை ‘தாழ்ந்த மனிதர்கள்’, ‘தூய்மையற்றவர்கள்’ எனக் கருதுவதோடு, ‘தீண்டத்தகாதவர்கள்’ என்றும் அழைக்கின்றனர்.

‘சாதி’ என்னும் சொல்

சாதியப் பாகுபாட்டை ஆராயும்போது ‘சாதி’ என்ற சொல்லின் வரலாற்றையும் நோக்க வேண்டும். தொல்காப்பியர் இச்சொல்லை நீர்வாழ் உயிரினங்களைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளார்; பிற்காலத்தில் இது மக்களைக் குறிக்கும் சொல்லாக மாறியது. இச்சொல் குறித்துச் சாமி சிதம்பரனார் பின்வருமாறு கூறுகிறார்:

> *சாதி என்பது தமிழ்ச்சொல் அன்று, ஜாதி என்ற வடமொழிச் சொல்லே சாதி என்று தமிழில் வழங்குகின்றது. இந்த சாதி என்ற சொல்லும் மக்களைக் குறிக்கும் சொல்லாகப் பண்டையக்காலத்தில் வழங்கவில்லை. (சிதம்பரனார் 71)*

‘அளம்’: அதிகாரமும் வளப் பகிர்வும்

‘அளம்’ நாவலில் இடம்பெறும் அருணாச்சலத்துக்குச் சுற்றுவட்டாரத்தில் நல்ல செல்வாக்கும் அளவில்லாத சொத்துகளும் உள்ளன. கடத்தல் தொழிலிலும் குறுக்கு வழியிலும் உயர்ந்தவன் என்பதால் ஊர்மக்கள் அவனைக் கண்டு அஞ்சுகின்றனர். பேரிடர் காலங்களில் அரசாங்கம் வழங்கும் நிவாரணங்களைத் தன்வசப்படுத்தித் தன் சமூகத்தினருக்கே கிடைக்கச் செய்துவிடுவான். இதனைப் பின்வரும் உரையாடல் புலப்படுத்துகிறது:

> *சர்க்காருலேருந்து நம்வூருக்கு என்ன சலுவ வந்தாலும் அத இவரு ஒடனேத் தடுத்து ஆம்புடிப்பயலுவ இருக்குற வூருவளுக்கே செய்ய வச்சர்றாண்ண....*
>
> *அது மட்டுமில்லண்ண... அம்பலகாரனுவொளுக்கெல்லாம் ஒரு வூரு அதுக்கு ஒரு ரோடான்னு எளக்காரமாகப் பேசுவாராண்ண அந்தாளு. (தமிழ்ச்செல்வி, அளம் 109)*

இதன் வழி, சாதிய அதிகாரம் அரசு உதவிகளின் பகிர்வையும் தீர்மானிக்கும் ஆற்றலாக இயங்குவதையும், பிற சமூகத்தவரை இழிவாகப் பேசும் மனப்போக்கு நிலவுவதையும் காண முடிகிறது.

‘கண்ணகி’: தீண்டாமையும் நீர்நிலை மறுப்பும்

சாதியத் தீண்டாமை எனும் நஞ்சு சமூகத்தில் பரவிக் கிடப்பதை சு. தமிழ்ச்செல்வி தமது நாவல்களில் பதிவு செய்துள்ளார். ‘கண்ணகி’ புதினத்தில் பட்டியலினத்தவர்கள்

அடிமையாகவும், உயர்ந்த வகுப்பினர் ஆதிக்க வர்க்கமாகவும் காட்டப்பட்டுள்ளனர். பட்டியலினத்தவர்களுக்கு ஏரி, குளம் போன்றவைகளில் இறங்க அனுமதி இல்லை. கண்ணகியிடம் சின்னவொடை, இந்நீரானது ஏரி, குளம் நீர் போல் ஒரே இடத்தில் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கும் நீர்; இதில் நீராடினால் உன் தீட்டும் ஒட்டாது, அவர்கள் தீட்டும் ஒட்டாது என்று கூறுகிறார். அதற்கு கண்ணகி பதிலளிக்கும் உரையாடல்:

> *'தொட்டா நம்ம தீட்டு அவங்கமேல ஒட்டிக்கிற மாதிரிதான் அவங்கதீட்டும் நம்மமேல ஒட்டிக்கும்'*
>
> *'அவங்கக்கிட் ஏதுத்த தீட்டு?'*
>
> *'நம்மகிட்ட மட்டும் இருக்கு தீட்டு?'*
>
> *'அப்பறம் எதுக்கு குடியானவங்களகண்டா ஒதுங்கி போறம்?' (தமிழ்ச்செல்வி, கண்ணகி 88)*

இவ்வுரையாடல் தீட்டு என்ற கருத்தின் அடிப்படையையே கேள்விக்குள்ளாக்குகிறது; சாதியத் தீண்டாமை நிலவுவதையும் அதன் தர்க்கம் எளிதில் உடைபடுவதையும் காண முடிகிறது. மேலும், 'ஊர் தெரு' என்று கூறப்படும் உயர்ந்த வகுப்பினர் வசிக்கும் தெருக்களின் வழியாகச் செல்லும் பட்டியலினத்தவர்களும் தாழ்ந்த வகுப்பினரும் செருப்பணியாமல் சென்றனர் என்பதையும் நாவலாசிரியர் பதிவு செய்துள்ளார். இவ்வாறு நீர்நிலைகள், தெருக்கள் ஆகிய பொதுவெளிகளிலும் காலணி அணிவது போன்ற அன்றாட நடைமுறைகளிலும் சாதியப் பாகுபாடு செயல்படுவது வெளிப்படுகிறது.

'கீதாரி': பெண்ணுக்கு ஏற்படும் தீண்டாமை

ஒரு பெண்ணிற்கு ஏற்படும் தீண்டாமைக் கொடுமையை 'கீதாரி' புதினத்தில் விவரித்துள்ளார். சிவப்பி என்பவள் சாம்பசிவத்தின் வளர்ப்பு மகளாக இருந்து, பின்பு அவரது வீட்டில் வேலைக்காரியாக அடிமைப்படுத்தி வைக்கப்பட்டாள். பங்குனி, சித்திரை மாதங்களில் பூக்கும் இலுப்பைப் பூவை சேகரித்து வைத்து வீட்டிற்குப் பயன்படுத்துவது வழக்கம். ஒரு நாள் சாம்பசிவத்தின் மூத்த மனைவி பதமான தனலில் பூக்களை வறுத்து வெல்லத்தோடு இணைத்து உரலில் கொட்டிச் சிவப்பியை இடிக்கச் சொன்னாள். உரலின் அடியில் புளிபோல ஒட்டிக்கொண்டதைத் திருப்பிப் போட்டு இடிக்கட்டுமா? என்றதும் அவள்,

> *வேண்டாம். வேண்டாம். நீ கைய வச்சிடாத. கெட்டுப் போயிருக்கும். ரெண்டு மூணு நாளு வச்சிருந்துகொட திங்களாம். சலுப்படிச்சி பெயிட்டுன்னாக்க அப்பறம் குப்பயிலதான் கொட்டணும் (தமிழ்ச்செல்வி, கீதாரி 84)*

என்று முகம் சுளித்துக் கூறினாள். இங்கு ஒரு பெண்ணைத் தீண்டாமைக்கு உள்ளாக்கியதை ஆசிரியர் உணர்த்தியுள்ளார். இலுப்பைப் பூக்களை தான்

கைகாலால் எடுத்தபோது வராத தீண்டாமை, அவற்றைச் சமைக்கும்போது மட்டும் வருகிறதா என்று அவள் மனத்துக்குள் முணுமுணுக்கிறாள். இதுபோன்ற தீண்டாமைகள் குறித்தும் அவரது சில புதினங்களில் எழுதப்பட்டுள்ளது.

ஒப்பீடும் கண்டுபிடிப்புகளும்

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நாவல்களில் வறுமையும் சாதியப் பாகுபாடும் வெவ்வேறு நிலைகளில் வெளிப்பட்டாலும், இரண்டும் குடும்ப வாழ்வின் அடிப்படைத் தேவைகளையும் சமூக உரிமைகளையும் மறுக்கும் காரணிகளாகவே அமைகின்றன.

நாவல்	வறுமையின் வெளிப்பாடு	சாதியப் பாகுபாட்டின் வெளிப்பாடு	முதன்மைப் பாத்திரங்கள்
அளம்	தலைவன் வேலைக்குச் செல்லாமை; குடும்பச் சண்டை; ஒருவேளை உணவு; மகளுக்கு மேல்சட்டை இல்லாமை	அருணாச்சலத்தின் செல்வாக்கு; அரசு நிவாரணத்தைத் தன் சமூகத்துக்குத் திருப்புதல்; பிற சமூகத்தவரை இழிவாகப் பேசுதல்	சுந்தரம்பாள், சுப்பையன், வடிவாம்பாள், அஞ்சம்மாள், அருணாச்சலம்
கீதாரி	கரிச்சாவின் தாய் கிழிந்த பாவாடையுடன் நிற்கும் நிலை	வீட்டு வேலைக்காரியாக வைக்கப்பட்ட சிவப்பிக்குத் தீண்டாமை	கரிச்சாவின் தாய், சிவப்பி, சாம்பசிவம்
கண்ணகி	—	நீர்நிலைகளில் இறங்கத் தடை; ஊர்த் தெருவில் செருப்பணியத் தடை; ‘தீட்டு’ பற்றிய உரையாடல்	கண்ணகி, சின்னவொடை
மாணிக்கம்	வீடு இன்றி இடம் தேடி அலையும் நிலை	—	மாணிக்கம், செல்லாயி

ஆய்வின் வழி அறியப்படும் முடிவுகள் பின்வருமாறு:

1. குடும்பத் தலைவனின் வேலையின்மை குடும்பத்தில் சச்சரவையும் உணவுப் பற்றாக்குறையையும் உருவாக்குகிறது; ஒருவேளை உணவே என்ற நிலை குழந்தைகளையும் பாதிக்கிறது.
2. உணவுக்கு அடுத்த நிலையில் உடையும் உறைவிடமும் மறுக்கப்படுவதை நாவல்கள் காட்டுகின்றன; உடை வறுமையின் வெளிப்படையான அடையாளமாகிறது.

3. சாதிய அதிகாரம் அரசு நிவாரணங்களின் பகிர்வைத் தீர்மானிக்கும் கருவியாகச் செயல்படுகிறது.
4. தீண்டாமை நீர்நிலைகள், தெருக்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
5. வறுமையையும் தீண்டாமையையும் பெண்கள் இணைந்து சுமக்க நேரிடுவதைச் சிவப்பியின் வழி அறிய முடிகிறது.

முடிவுரை

மனிதனின் தொடக்ககாலக் கூட்டுவாழ்வு முறையிலிருந்து தோற்றம் பெற்ற குடும்ப அமைப்பு, காலந்தோறும் பல்வேறு மாற்றங்களைப் பெற்று இன்றளவும் சமூகத்தின் அடிப்படை அலகாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. குடும்பம் தனிமனிதனின் வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்யும் அமைப்பாக மட்டும் அல்லாமல், சமூகத்தின் பண்பாடு, உறவுமுறை, பொருளாதார நிலை மற்றும் அதிகார உறவுகளை வெளிப்படுத்தும் களமாகவும் அமைகிறது. குறிப்பாக விளிம்புநிலை மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் குடும்ப வாழ்க்கை வறுமை, சமூகப் புறக்கணிப்பு, சாதியப் பாகுபாடு போன்ற பல்வேறு சிக்கல்களால் பாதிக்கப்படுவதை சு. தமிழ்ச்செல்வியின் நாவல்கள் தெளிவாகப் பதிவு செய்கின்றன.

‘அளம்’, ‘கீதாரி’, ‘கண்ணகி’ போன்ற நாவல்களில் இடம்பெறும் குடும்பங்கள் வழியாக, விளிம்புநிலை மக்களின் அன்றாட வாழ்க்கை, உறவுகளின் தன்மை, பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, குடும்ப வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கும் சாதியப் பாகுபாடுகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வறுமை ஆகியவை அவர்களின் வாழ்வில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைப் படைப்பாளி எதார்த்தமாகப் பதிவு செய்கிறார். இந்நாவல்களில் குடும்பம் தனித்த அமைப்பாகச் சித்தரிக்கப்படாமல், சமூகத்தின் பொருளாதார மற்றும் சாதியக் கட்டமைப்புகளோடு தொடர்புடைய ஓர் அமைப்பாகவே காட்டப்படுகிறது. வேலையின்மையால் ஏற்படும் சண்டைகள், உணவின்மை, உடையின்மை, உறைவிடம் தேடல், அதிகாரமிக்கவர்களின் ஆதிக்கம், நீர்நிலைகளில் இறங்க மறுக்கப்படுவது, பெண்களுக்கு ஏற்படும் தீண்டாமை ஆகியவை விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைவதை இந்நாவல்கள் உணர்த்துகின்றன. இதன் மூலம் குடும்பச் சிக்கல்கள் தனிமனிதப் பிரச்சினைகள் மட்டுமல்ல; அவை சமூக அமைப்பின் குறைபாடுகளோடும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளோடும் தொடர்புடையவை என்பதை அறிய முடிகிறது.

எனவே, சு. தமிழ்ச்செல்வியின் நாவல்கள் விளிம்புநிலை மக்களின் குடும்ப மற்றும் சமூக வாழ்வை வெறும் புனைவாகப் பதிவு செய்யாமல், அவர்களின் வாழ்வியல் எதார்த்தம், வறுமை, சாதியப் பாகுபாடு, சமூகப் புறக்கணிப்பு மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை வெளிப்படுத்தும் சமூக ஆவணங்களாகத் திகழ்கின்றன. குடும்பத்தின் வழியாகச் சமூகத்தைப் புரிந்துகொள்ளவும், சமூகத்தின் வழியாகக்

குடும்பச் சிக்கல்களின் காரணிகளை ஆராயவும் இந்நாவல்கள் வாய்ப்பளிக்கின்றன. அந்த வகையில், சு. தமிழ்ச்செல்வியின் படைப்புகள் விளிம்புநிலை மக்களின் வாழ்வை இலக்கியத்தின் மையத்திற்குக் கொண்டு வந்து, அவர்களின் வலிகளையும் போராட்டங்களையும் சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும் முக்கியமான படைப்புகளாக அமைகின்றன.

துணைநூற்பட்டியல் (MLA)

References

அமிர்தலிங்கம், த. தமிழ்க்கவிதைகளில் வறுமைப்புனைவு. [பதிப்பகம், ஆண்டு சேர்க்கவும்].

சிதம்பரனார், சாமி. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும். [பதிப்பகம், ஆண்டு சேர்க்கவும்].

தமிழ்ச்செல்வி, சு. அளம். 4th ed., New Century Book House Pvt. Ltd., Nov. 2018.

———. கண்ணகி. 1st ed., New Century Book House Pvt. Ltd., Feb. 2022.

———. கீதாரி. 16th ed., New Century Book House Pvt. Ltd., Aug. 2023.

———. மாணிக்கம். [பதிப்பகம், ஆண்டு சேர்க்கவும்].

புறநானூறு. [பதிப்பாசிரியர், பதிப்பகம், ஆண்டு சேர்க்கவும்].